(This question paper contains 2 printed pages)

Roll No.

799

D

# B. A. (Programme)/I
## Tamil Language-B: Paper-I
## Skill of Language use and a Modern Prose Text

Duration : 3 Hours

Maximum Marks : 75

1. ஏதேனும் ஒரு தலைப்பில் சிறு கட்டுரை (150 சொற்கள் ) *ஒன்று* வரைக: 15

அ. தமிழக மீனவர் பிரச்சினை

ஆ. அரசியல் வன்முறை

இ. முதியோர் இல்லங்களின் பெருக்கம்

2. கீழ்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினவப்பட்டிருக்கும் வினாக்களுக்கு உரிய விடை தருக: 15

தேவேந்திரனும் கௌதமனும் பாற்கடல் கடைந்தனர். தேவேந்திரன் கடையும் போது அவனுக்குக் கழுதை கிடைத்தது. கௌதமன் கடையும் போது அவனுக்கு அகலிகை என்ற அழகிய பெண் கிடைத்தாள். தேவேந்திரன் இந்தப் பெண் எனக்கே என்று கூற, தேவ சங்கத்தார் கூட்டத்தில் வழக்கு பேசி, அவர்கள் அளித்த தீர்ப்பின் மூலம் கௌதமனுக்கு மனைவியானவள் அகலிகை. மனதில் வஞ்சகம் கொண்டிருந்த இந்திரன் ஒரு நாள் இரவு கௌதமர் உருவில் அகலிகையை நாடி வந்து அவள் வீட்டுக் கதவைத் தட்டினான். இந்திரனின் மாயையால் வெளியில் சென்றிருந்த கௌதமர் திரும்பி வர, இந்திரனின் சூழ்ச்சி இது என்பதைப் புரிந்து கொண்டு இந்திரனுக்குச் சாபம் அளித்ததோடு, தன் மனைவி அகலிகை அவனோடு கொண்டிருந்த பாசத்தால்தான் இந்திரன் தன் வீடு வரை வந்து விட்டான் என்று கோபம் கொண்டு அவளைக் கல்லாகச் சபித்தார். கல்லாக மாறிய அகலிகை, தாடகை வதம் முடித்து மிதிலாபுரி சென்றபோது ராமன் கால் பட்டு மீண்டும் பெண்ணாக மாறி வந்தாள். ராமன் அறிவுரைப் படி மீண்டும் கௌதமனோடு வாழ்ந்தாள் அகலிகை.

கேள்விகள் :

அ. யார் யார் பாற்கடல் கடைந்தனர்? அவர்களுக்கு என்ன கிடைத்தது?

ஆ. அகலிகை கௌதமனுக்கு எப்படி மனைவியானாள்?

இ. கௌதமன் மீது கொண்ட கோபத்தால் இந்திரன் என்ன செய்தான்?

ஈ. அகலிகை பெற்ற சாபமும் சாப விமோசனமும் யாவை?

உ. மேற்கண்ட பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி, மையக் கருத்தை எழுதுக.

3. பிழை திருத்துக 5

அ. கன்னதாசன்

ஆ. சுத்தாணந்த பாரதியார்

இ. கலைக்கழஞ்சியம்

ஈ. சீவக சிந்தாமனி

உ. சிவப்பதிகாரம்

4. ஒரு பொருள் குறித்த பல சொற்கள் மொழியில் பெறும் இடத்தினைச் சான்றுகளுடன் விளக்குக. 5

(அல்லது)

பல பொருள் ஒரு சொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விளக்குக.

5. *பள்ளத்தெரு* (அல்லது) *வீடு* என்ற சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை ஆராய்க. 20

6. *மாயக்கிளிகள்* (அல்லது) *இலைகள் சிரித்தன* என்ற சிறுகதையை மதிப்பிடுக. 15